Regd:No. M. 5277. UDUMALAI BEERANGI டெலிபோன் 2597.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R. இரங்கநாதன்

வெடி 1.] 8-பக்கங்கள் சென்னை, சனிக்கிழமை (15-1-1949) விலை 1 அணா [குண்டு 15

தமிழகத்திலே திருநாள்

தனமனோகரன்

ஆம்! தமிழகத்திலே திருநாள் தான்! உள்ளத்திலே உணர்ச்சி பொங்கி வழிய, முகத்திலே மகிழ்ச்சி மலர உற்சாகத்தோடு கொண்டாடும் பொங்கற் புது நாள் தான்! வாழ்க்கையிலே வறுமைப் பூண்டிருந்தாலும், ‘‘இனியும் உழைப்போம்—வாழ்வோம், ஆனால் ஊறுதேடுவோரை அனுமதியோம், உழையாது உண்டு கொழுத்திருப்போன், உழைப்பவனை உருக்குலைக்க வைப்பதனால் அந்த உலுத்தன் இனிவாழ தமிழர்களாகிய நாம் சகியோம்!! என்று ஒவ்வொரு தமிழ் மகனும் சூளுரை எடுத்துக் கொள்ளும் திருநாள் ஒன்று இந்நாட்டிலே உண்டு என்றால் அது பொங்கல் திருநாளே யாகும்! மற்ற விழாக்களைப் போன்று இது உலுத்தர்களின் உல்லாச வாழ்விற்கு ஆக்கந்தேடித் தருவது அன்று. தமிழகத்தின் எம்மருங்கிலும், தமிழர் இல்லந்தோறும், தமிழர் அனைவர் உள்ளத்திலும் புத்துணர்வும் எழுச்சியும் மலர்ச்சியும் தோன்றி தமிழரைக் களிப்புக் கடலில் குதித்தாடச் செய்யும் நன்னாள்! இந்நாள் தமிழ் நாட்டின் மே தினம்!

தோழர்களே! இந்நாட்டு மக்கள் கடவுளர்களுடைய திருவிழாக்களைக் கொண்டாடும்பொழுது கடவுளுடைய எந்த சாயல்களை, குணங்களை நினைவுபடுத்திக் கொள்ளுகிறார்கள்? சிவனுக்கென்று கொண்டாடப்படுகிற ‘சிவராத்திரி’ போன்ற திருவிழாக்களிலே இந்நாட்டுக்கு என்ன நன்மை ஏற்படுகிறது என்றால், ஒரு குடும்பப் பெண் அந்தத் திருவிழாவின் நோக்கத்தை அடிப்படைத் தத்துவத்தை அறிய விரும்பும் பொழுது, சிவன் சப்தரிஷிகளின் பத்தினிகளையும், துரோணாச்சாரியாருடைய மனைவி சிருபியையும், மற்றுமுள்ள எத்தனையோ பெண்களையும் கற்பழித்த ‘காமசேஷ்டைகள்’ தானே அவள் நினைவிற்கு வரமுடியும்! கிருஷ்ண ஜெயந்தியைக் கொண்டாடும் பொழுது, அவனுடைய காமாந்தகாரப் படலங்களுக்கு உறைவிடம் ‘பரஸ்திரீகளின்’ பள்ளியறையல்லவா? என்று சிந்திக்கத்தானே தூண்டும். ஏ! பழமையிலுழலும் மானிடர்களே! உங்களது திருவிழாக்கள் உங்களைப் பகுத்தறிவினின்றும் விலக்கி, பழமைக் குட்டையிலே—அறியாமையிலே அமிழ்த்த முயற்சிக்கின்றனவே! இவற்றைப் பற்றி சிந்தனை செய்து சீரிய வாழ்வைப் பொங்கற் புதுநாளில் தொடங்குமாறு வற்புறுத்திக் கூறுகிறேன்.

அருங் கருத்துக்கள் மிக்க, சீவக சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களை தமிழ் நாட்டிற்களித்த நல்லறிவாளர்களான சமணர்களை, வைதீக பார்ப்பனன் சாட்சாத் சம்பந்தர் கழுவிலேற்றிய நாளை, இன்றும் மதுரையம்பதியிலே திருநாளாகப் பாவித்து சைவ மெய்யன்பர்கள் களித்து வருகின்றனர். இத்தகைய பார்ப்பனர்களின் வெற்றி தினத்தைக் குறிக்கும் திருநாட்கள் நமக்குத் தேவைதானா! நாம் என்ன பகுத்தறிவற்றவர்களா?

இன்று மேல்நாடுகளனைத்தும் தம் நாட்டிலுள்ள மடமைத்தனமாதி கொடுமைகளை ஒழித்து, உன்னத நிலைக்கு விஞ்ஞான வேகத்தில் முன்னேறி வருகின்றன. அந்த நாட்டிலே உள்ள விழாக்கள் அனைத்தும் மன்னர்களின் மமதையைத் தொலைத்து, தருக்கர்களின் செருக்கை ஒழித்து, மதப்பித்தர்களின் கொடுமையை அழித்த மக்களாட்சி நிறுவிய நன்னாட்களாகத்தான் இருக்குமேயொழிய நம் நாட்டிலுள்ள மூட நம்பிக்கைகள் மிகுந்த ‘வைகுண்ட ஏகாதசி’, ‘தீபாவளி’ போன்ற திருவிழாக்களாக இராது.

கிரேக்க நாட்டிலே, மக்கள் உள்ளத்தில்—அன்பு, உண்மை. அழகு இவையே ஆண்டவன் என்ற கருத்தை ஊட்டினான், பேரறிஞன் சாக்ரடீஸ். ஆனால் அந்த பகுத்தறிவாதிக்குக் கிடைத்தது ஒரு கோப்பை நஞ்சு! இன்று பகுத்தறிவும் புத்துணர்வும் பெற்ற கிரேக்க மக்கள் அவன் இறந்த நாளினைக் கொண்டாடுகிறார்கள்

உலகம் தட்டையானது என்ற பொய்க் கருத்தைத் தகர்த்து உலகம் உருண்டையானது என்ற தத்துவத்தை நிலைநாட்டினான், தத்துவ ஞானி கலிலியோ! அவன் பெற்ற பரிசு சிறைத் தண்டனை—விஞ்ஞான உலகம் அவனது நாளினைக் கொண்டாடுகிறது.

‘‘அரசன் தெய்வத்தன்மை பொருந்தியவன் தெய்வத்தின் பிரதி பிம்பம்’’ என்று தன்னைத்தானே உயர்த்திக் கொண்ட சார்லஸ் மன்னன், அவனது அரண்மனை முன்னிலையிலேயே தூக்கிலிடப்பட்டான்! தெய்வீக உரிமை பறிபோன அந்தப் புரட்சி தினத்தை நினைவுபடுத்த இன்றோர் விழா!

இரஷ்யாவிலோ, மன்னன் முதல் மதப்பித்தர்கள் வரை பாட்டாளி மக்களின் வாழ்விற்கு இடர் விளைவிப்போர் வரை மட்டந்தட்டி சுட்டு வீழ்த்தி, நாட்டிலே பொது உடமைக் கருத்துக்களை நிலைநாட்டி புதியதோர் சமுதாயம் நிறுவிய லெனின், காரல் மார்க்ஸ், ஸ்டாலின் போன்றோரை நினைவிலிருத்திக் கொள்ள—அவர்களைப் பெருமைபடுத்த ‘மே தினம்’, இரத்த ஞாயிறு போன்ற விழாக்கள்!

இவையே அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்திய இனியகருத்துக்கள். இவ்வாறன்றி நமது திராவிடநாட்டிலே இனிய, பகுத்தறிவு வளர்ச்சிக்கான கருத்துக்கள் மிக்க திருவிழாக்களை சுட்டிக்காட்டிமடத்தனத்தை வளர்க்கும் திருவிழாக்களை ஒழிக்கவேண்டுமென்று பெரியார் ஈ. வெ. ராமசாமி கூறினால், உள்ளந் துடித்து சீறுகிறார்கள், உணர்வற்ற—தன்மானமற்ற உலுத்தர்கள்.

ஒவ்வொரு உருவங்களுக்குள்ளே ஒவ்வொரு கடவுள் புகுந்திருக்கிறார் என்று திராவிட மக்களை நம்ப வைத்து அந்தக் கடவுளுக்கு விருப்பமானவை என்று ஆடையாபரணங்கள் தரிப்பித்து, மலர்கள் சூடி, களபங்கள் பூசி, தாம்பூலங்களை அவைகளின் கைகளில் வைத்து பள்ளியறையில் விலையுயர்ந்த பஞ்சணைகள் மீது சயனிக்க வைத்து, ருதுச் சடங்குகளில் கொண்டாடி, அம்மன் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டு ஓடிப்போய்விட்டாள் என்றுகூறி, கணவனான கடவுளுக்கு நலவு கூறி அழைத்துக் கொண்டு வைத்துக் கொள்கிற தாய் கோரணிகள் செய்தும், குளிர் காலத்தில் வெப்பந்தரும் உடைகளுடுத்தி, வேனிற்காலத்தில் விசிறிகளால் வீசுவதும், கொசுக்கடி காலத்தில் கொசு வலைகள் கட்டியும் பல அறிவற்ற செய்கைகளைச் செய்து வருகின்றனர், பார்ப்பனப்புரோகிதர்கள். இதனால் எவ்வளவு பணம் பாழ், பகுத்தறிவு பாழ், கருத்துப் பாழ் என்பதை ஒவ்வொரு திராவிடரும் சிந்தித்துப்பார்க்க வேண்டும்—சிந்தித்த பின்பு காலமறிந்து கடமைகளைச் செய்யவேண்டும்

ஒரு கல்லைக்காட்டி, கயவர்களாக்குவது இந்த நாட்டு வீரர்களை—வீராங்கனைகளை, ஒரு ஏட்டுச்சுவடியை காட்டி ஏமாற்றிவிட்டது இந்த நாட்டுப் பழங்குடிமக்களை. ஒருகாய்ந்தபுல்லைக் காட்டி கயவர்களாக்கியது — தாசர்களாக்கியது—இந்த நாட்டு செல்வந்தர்களை. இல்லாத உலகைக்காட்டி எய்த்து விட்டது இந்த நாட்டு மணிவேந்தர்களை. அதன் காரணமாகத்தான் பார்ப்பனீயத்திற்கு அடிமைப்பட்டதோடு மட்டுமின்றி, இன்றைய அரசியலையும் அதற்குப் பறிகொடுத்து உரிமையையும், உள்ளத்தையும் இழந்து நிற்கிறான், திராவிடன்.

இவையாவும் இழந்த திராவிடனே! உனக்கு இஞ்ஜெக்ஷன்! கொடுத்து மீண்டும் தன்னரசுபெற தயங்காது பணி யாற்ற அதோ இருக்கிறது பெரியாரின் பெரும்படை! விடுதலை கொடுக்கும் வீரப்படை! தீய முறைகளை—புல்லேந்திய பூசுரர் கூட்டத்தின் சித்தத்திலே நெளியும் புல்லறிவைப் பொசுக்கும் தீப்பந்த மேந்திய தீரப்படை! அதிலே உனதுபெயர் பொறிக்கப்பட பொங்கல் திருநாள் வழிகாட்டியாக அமையட்டும். உனது வீட்டிலே பானை பொங்காமலிருக்கலாம்! அதற்காகக் கவலைப்படாதே! இந்தப் பொங்கலில் உனது உள்ளமாவது பொங்கட்டும்! உனது வீட்டிலே தீ மூட்டப்படவில்லையே என்று கன்னத்தில் கை வைத்து உட்கார்ந்து விடாதே! நீ பாடுபட்ட உழைப்பின் பயனை அனுபவித்து உண்டு வாழும் ஆரியக்கோட்டையின் உள்ளம் அதிர தீப்பந்தம் எத்து! புத்தாடை யில்லையே என்று கவலைப் படாதே! அணிந்துகொள் கருஞ் சட்டையை! முழங்கு, புரட்சி! புரட்சி!! புரட்சி!!! என்று—அப்பொழுதுதான் விடுதலை கிட்டும் இந்த வீணர் கூட்டத்திடமிருந்து.

—: (x) :—

ஏழைக்கு ஏது பொங்கல்?

க. மாணிக்கவாசகன்

ஏழையவன் வாழவகை யற்ற இந்நாள்
இனிதென்று பொங்கலைநாம் எப்ப டிக்கு
கோழைமனம் படைத்திட்டு அனைவர்க் கூட
கூத்தடித்து ஆடுவதா! வறுமை கண்டும்!

வாழ்வதற்கும் வகையில்லை; மழையு மில்லை!
விளைச்சலெங்கும் இல்லை! இல்லை’ வறுமை யாற்றில்
மூழ்குகிற உழவனுக்கு ஏதுப் பொங்கல்?
மூண்டெழுந்த வறுமையிலா இன்பப் பொங்கல்?

இருக்கின்ற எலும்பெல்லாம் அவனு டம்பில்
எட்டி எட்டி பார்க்கிறது வெளியில் வந்து!
பெருக்குகிறாள் அவன் மனைவி கண்ணீர் ஆறாய்
பிள்ளைகளும் சோர்வுற்றார்; உழவன் நெஞ்சில்

கருக்கதவை திறந்ததைத்தான் நினைப்பா னுவன்?
கலியாணம் செய்ததைத்தான் பிசகென் பானா?
நெருக்கடியை நினைப்பானா? பொங்கல் நாளை
நினைத்துத்தான் அழுவானா? எங்கே இன்பம்?

பொன்னான நெல்மணியை தைமா தத்தில்
போயறுத்த கைகளைத்தான் நினைப்பா னுவன்?
நன்றாக கொழுத்திருந்த உழவு மாடு
நடக்கமுடி யா நிலையை நினைப்பா னுவன்?

குன்றான தன்தோளேன்? கொம்புப் போல
குறுகிவிட்ட தென்றுத்தான் அழுவா னுவன்?
இன்றையநல் ஆட்சியைத்தான் நினைப்பா னேவன்?
இருவிழியில் நீர்சோர எதை நினைப்பான்?

புதுமஞ்சள், செங்கரும்பு, புதுப்பா னைக்குள்
புடமிட்ட வெள்ளியென நிறையப் பாலும்
விதவிதமாய் பட்டாடை; பசுநெய் யாலே
வடித்தெடுத்த சிற்றுண்டி விதங்கள் நூறு

மதியம்போல் தோசைவகை; முல்லை யன்ன
மலையன்ன குவித்திட்ட வெண்சோ றோர்பால்!
இதனையெலாம் எப்படியாம் எடுத்தே உண்போம்
எனநினைக்கும் நாளன்றோ இன்பப் பொங்கல்!

புது வீடுகள் வாடகை சம்பந்தமாக சர்க்கார் அறிக்கை

வாடகைக் கட்டுப்பாடுச் சட்டம் அமுலுக்கு வந்த 1946-ம் வருஷம் அக்டோபர் முதல் தேதிக்குப் பின் கட்டப்பட்ட புதிய வீடுகளை முதன் முதலாக வீட்டுச்சொந்தக்காரர்களே குடித்தனத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் அல்லது தங்களிஷ்டப்படி குடித்தனக்காரர்களுக்கு விடலாம். ஆனால் இதன் பின்பு காலியானால் ஜாகை வசதி அதிகாரிக்குச் சட்டப்படி தெரிவிக்கவேண்டும் என்று பிரஸ்தாபச் சட்டத்தின் 3 (1, வது பிரிவை விளக்கி சர்க்கார் இன்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

புரட்சிக் கவிஞர்



பாரதிதாசன்

பு. அ. சசிசேகரன்

புதுவைக்குயில்-பாரதிதாசன் புரட்சிக் கவிஞர் என்று பலவாறு புகழ்ந்து கூறுவது கனகசுப்புரத்தினத்தை. அவர்தோற்றம் - உணர்ச்சியின் உருவம்-புரட்சியின் சின்னம்! பாரதிதாசன் என்றால் புரட்சி என்றுதானே பொருள்! எப்படி? இதில் என்ன வியப்பு! பாரதிதாசன் என்றால் புரட்சியை மூட்டிவிடும் ஒரு சக்திஎன்பதைத் தமிழர்கள் சென்ற இந்தி எதிர்ப்புப் போரில் முதன் முதலில் உணர்ந்தனர். அவர் புரட்சிகரமாக பாடுதற்குக் காரணம், அவர்வாழும் புதுவைஆகும். புதுவை பிரான்சு நாட்டைச்சேர்ந்தது. பிரான்சு சுதந்திரத்தின் பிறப்பிடம். ஆகவே பிரான்சின் சாயல்-தென்றல் அவர்வசிக்கும் புதுவையில் வீசுவதால் தான், அவர் கொடுக்கும் தலைப்புகள் புரட்சிகரமானதாக, புத்துலக கருத்துக்களை கொண்டதாக இருக்கிறது.

தமிழ் இலக்கிய வானத்தில் இளஞாயிறு எனத்தோன்றினார் பாரதிதாசன். இந்த இளஞாயிறு, மூண்டெழுந்த பல எதிர்ப்புச் சக்திகளை முறித்துத்தள்ளி, தன்னை அழிக்க வந்த பல ஆபத்துகளைத் தகர்த்தெறிந்துவிட்டு, மடமடவென மேலோங்கி, இன்று தமிழ் வானத்தில் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி ஒளி வீசித் திகழ்கிறார் பாரதிதாசன். தன்பாடல்கள் மூலம் வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கு எழுச்சி யூட்டினார். விசையொடிந்த தேகத்திற்கு வன்மை யூட்டினார். அவரதுபாடல்களில் எளிமை, அழகு, வீரம், காலத்திற்கேற்ற விவேகம் இவை அனைத்தும் சேர்ந்து அவரது பாடல்களில் புரட்சி மணம் வீசும்படி செய்கின்றது. ஆகவேதான் அவர் பாட்டு என்றால் தமிழ்நாட்டிற்கு அவ்வளவு அகமகிழ்வு. எனவேதான் பாரதிதாசனை 'புரட்சிக்கவிஞர்' என்று தமிழகம் அழைக்கிறது.

பாரதிதாசன் பாக்களில் புதுக்கருத்துக்களை-பழமைக்குப் புறம்பான கருத்துக்களை-நாட்டிற்குத் தேவையான பகுத்தறிவுக் கருத்துக்களை காணலாம். அவரது பாடல் எளிய நடையில் எல்லோரும் புரிந்து கொள்ளுமாறு இயற்றப்பட்டு இருக்கிறது. அவரது கவிதைகளில் புரட்சி மணம் மட்டுமல்லாமல் பொதுவுடமை மணமும் சேர்ந்து கமழ்கிறது. பாரதிதாசன் குள்ளஉள்ளத்தை கொலை செய்கின்கிறார். கூனுருதே நிமிர்ந்து நட என்கிறார். அந்தலோகத்தைப் பற்றிப் பாடாதே இந்த லோகத்தைப்பற்றி பாடுஎன்கிறார் அவர்நம்மை அழைத்துச் செலுத்துவது புதுஉலக வாழ்விற்கு-புரட்சிபாதைக்கு! எனவே, தான் அவரைப் 'புரட்சிக்கவி' உயிர் கவி, உண்மைக்கவி என்றழைக்கின்றனர்.

'வள்ளுவனைப் பெற்றது தமிழ்நாடு! அவன் தன்நாட்டுக்கு வான்புகழ் கொணர்ந்தான்! இளங்கோவனைப் பெற்றது தமிழ்நாடு! அவன்நாட்டு வணிகச் சிறப்பை-கலையை - பண்பாட்டை ஞாலமறியச் செய்தான்! பாரதிதாசனைப் பெற்றது தமிழ்நாடு! அப்பாவரசன் தன் தமிழ்க் கழனியிலே காணப்பட்ட களைகளைக் களைந்தான். புதுமை நீர் பாய்ச்சினான்! புரட்சிக் கதிர்- விளைத்தான். ஒரே தொடரில் கூறவேண்டுமானால் தன்னை பெற்ற நாட்டையே புதுப்பித்தான்! அந்த தியாக மூர்த்தியின் பாரதிதாசனின் திருவுருவப்படம் தமிழ்நாடு எங்கனும் மாடமாளிகைகளிலும்; மண்குடிசைகளிலும், மக்களின் மனதிலேயும் பிரகாசிக்கவேண்டும்.

இவ்வளவு கருத்துக்களைக் கவிகளில் கொட்டும் அந்த அஞ்சாநெஞ்சம் படைத்த ஆணழகர் யார்? ஈரோட்டு பகுத்தறிவுப் பள்ளியில் பெரியார் இராமசாமியாம் ஆசிரியரிடம் படித்துப் பட்டம் பெற்ற சுயமரியாதை இயக்கத்தின் சிறு பொறி.

"பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது. சிறுத்தையே
வெளியில்வா
சிம்புட் பறவை சிறகைவிரி எழு
சிங்க இளைஞனே திருப்பு முகம்
திறவிழி
இங்குன் நாட்டிற் கிழிகழுதை ஆட்
சியா?
எலியென உன்னை இகழ்ந்தவர்
நடுங்க
புலியென செயல்செய புறப்படு
வெளியில்"

என்று அழைக்கிறார் இளைஞர் உலகைநோக்கி புரட்சிக் கவிஞர்.

வாழ்க புரட்சிக்கவி பாரதிதாசன்!
வளர்க அவர்தம் கொள்கை!
ஓங்குக அவர்தம் மாப்புகழ்!

——: (x) :——

ராவ்பகதூர்

ஆர். குருசாமி (நாயுடு)

உலகத்துக்கோர் நல் வழி காட்டி; பரந்த மனதும் பொதுப்பணியும்

கோவை ஜில்லா. உடுமலைப் பேட்டைக்கு வடபுரம் நீர்வளம், நிலவளம், பூமிவளம் பொருந்திய கிராமமாகிய பெதப்பம்பட்டி என்னும் ஊரில் 1885-ம் ஆண்டு செல்வாக்குமிருந்த கம்மவார் வமிசத்தில் கொங் பெரும் தன்மையான குணங்களைக் கொண்ட வரும் பரோபகாரத்தில் சிறந்த வருமாக ஷையூரில் பெருங்குடி மக்களில் பெருங்குடித்தனமாயிருந்தும் அவர் காலத்தில் மக்களுக்கு எவ்வளவு உதவி செய்ய வேண்டுமோ, அவ்வளவும் சீரும் சிறப்புமாக, செய்து வந்தார்.

அவரும் அந்த காலத்தில் தாலுக்கா போர்ட் ஜில்லா போர்ட் மெம்பராக இருந்து வந்தார்.

மனைவியார் அக்கம்மாளும் அவருக்கு உறுதுணை புரிந்து எல்லாவற்றிற்கும் மேன்மையுற்று விளங்கினார். இவர்களுக்கு வேலப்ப நாயுடு, குருசாமி நாயுடு, என இரு புத்திரர்கள் இருவர்கள் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஒற்றுமையாய் நிர்வாகம் செய்து வந்தார்கள். மூத்தவர் காலம் சென்றுவிட்டார். அவருடைய மறைவின் காலத்திலிருந்து சகல காரியங்களையும் கவனிக்கும் பொறுப்பு ஏற்பட்டும் பொறுப்புகளிலிருந்து, கொஞ்சமேனும், தளராமல் முன்னேற்ற வழிகளைக் கைப்பற்று நோக்கமாயும், ஒற்றுமைக்கும் அஸ்திவாரமாயும், கண்ணுங்கருத்துமாய் தீவிர நல்நோக்குடன் ஒவ்வொருகாரியத்தையும், செய்து வந்தார். குடும்ப ஒற்றுமை எங்கே இருக்கிறது? என்று வினவினால் பெதப்பம்பட்டி மந்தத் தோட்டத்துக் காரர்கள் என்று அந்த வட்டாரங்களில் இன்றும் கூட, சுலோகச் சொல்லாக உபயோகிக்கிறார்கள்.

எப்பொழுது? அக்கம்பக்கத்துக் கிராமங்களில் பாகப்பிவினை ஏற்படும் அந்த நேரத்தில் பஞ்சாயத்தார்கள் அண்ணன் தம்பிக்கு புத்தி புகட்டி வரும்போது நாமும் அண்ணன் தம்பிகள் தானா? பெதப்பம்பட்டி சென்று பாரும் எவ்வளவு பெரிய குடும்பம்? எத்தனை பேர்கள் உள்ள குடும்பம்? எத்தனை பேர்கள் அண்ணன் தம்பிகள் அவ்வளவு பெரிய குடும்பமும். சின்ன முத்து நாயுடு ஒருவரால் நிர்வகித்தும் குடும்பத்திலுள்ளவர்கள் அவ்வளவு பேரும், அவருக்குக் கீழ்ப்படிந்தும். ஒற்றுமையாய் அவர் அவர்களுடைய அன்றாட வேலையை செவ்வனே செய்து ஒத்துழைப்பையும்; அக்குடும்பம் பெற்ற பெருமையை அண்ணாரையும், அக்குடும்பத்திற்கு சம்பந்தப்பட்ட பெரியோர்கள் வாலிபர்கள், தேனினு மினிய பெண்டீர்கள் இளம் சிறார்கள் எல்லாறையும், போற்றாமல் இருக்க முடியவில்லை, குடும்ப ஒற்றுமை யுணர்ச்சியினால் குடும்பங்கள் மேலோங்கவும் முன்னேற்றம் அடைய மார்க்கங்கள் காணவும், முடியும் என்ற விளக்கத்தை அக்கம பக்கம் இருக்கும் மக்களுக்கு வழி காட்டியானார்கள்.

நமது நாயுடு, R. குருசாமி நாயுடுவை, பெதப்பம்பட்டி சின்ன முத்து நாயுடு என்ற செல்வப் பெயருடன் அழைத்தும் வருகிறார்கள்.

1922-ல் தன் சொந்த ஊராகிய பெதப்பம்பட்டி என்னும் கிராமத்தில் ஒரு ஆஸ்பத்திரியும், ஒரு பள்ளிக்கூடமும் தர்ம ஸ்தாபனமாக நிறுவினார். அதே நேரத்தில் தாலுக்கா போர்டு, ஜில்லா போர்டு, மெம்பர் ஸ்தானங்கள் வகித்தும், நல்ல ரோடுகள் அமைப்பதற்கும், மற்ற பொது நலக் காரியங்களில் முதன்மையாக இருந்து பணியாற்றி வந்தார்.

1942-ல் பழனியில் வித்யாதர மண்டபம் என்பது பழனியாண்டவர் சன்னதிக்கு முன்புரம் பழனியாண்டவர் மில்லின் சார்பாக கட்டி முடித்து திறப்பு விழாவும் செய்து சன்னதிக்கு ஒப்படைக்கப்பட்டது.

உடுமலையில் இருக்கும் பழனியாண்டவர் நூல் மில்லுக்கு மேனேஜிங் ஏஜண்டராக இருந்தும் அலுவல்களை கவனித்தும், வந்துகொண்டு இருக்கிறார்.

1944-ல் சென்னை கவர்னர் சர் ஆர்தர் ஹோப் அவர்கள் எப்ரல் 28-ம் தேதியில் உடுமலைப்பேட்டையில் நமது நாயுடு R. குருசாமி நாயுடு அவர்களால் கட்டித்தரப்பட்டிருக்கும், "ஸ்ரீ ரத்தினம்மாள் மெமோரியல் வார்டு" என்ற பிரசவ ஆஸ்பத்திரியின் திறப்பு விழாவை மிக்க மகிழ்ச்சியுடன் செய்து வைத்தார். அப்பொழுது கோவை ஜில்லா பல பிரபலஸ்தர்களுக்கும், மே. த. கவர்னர் அவர்களுக்குத், தேனீர் விருந்து அளிக்கப்பட்டும், நமது நாயுடு அவர்கள் பழனியாண்டவர் மில்லின் சார்பாக, செஞ்சிலுவை நிதிக்கு ரூபாய் 10,000 பத்தாயிரத்தையும், கவர்னரிடம் கொடுத்தார். சர் ஆர்தர் ஹோப் அவர்கள் தமது வரவேற்புக்கு பதிலளிக்கையில் திரு. குருசாமி நாயுடுவின் உதார குணத்தைப் பாராட்டியதுடன், 'ஸ்ரீ ரத்தினம்மாள் மெமோரியல் வார்டு' என்ற பிரசவ ஆஸ்பத்திரியை நிறுவ ஸ்ரீ குருசாமி நாயுடு அவர்கள் சுமார் 70,000 எழுபது ஆயிரம் வரை சிலவு செய்திருக்கிறார். உடுமலைப் பேட்டை வட்டாரத்திலேயே பொது நல காரியத்திற்காக இவ்வளவு பெரும் தொகையை செலவு செய்த பெருமை உயர் திருவாளர் R. குருசாமி நாயுடுவையே சாரும் என்று கூறி முடித்தார். அன்னாரின் பொது ஜன சேவையைப் பாராட்டி அரசாங்கத்தாரால் ராவ்பகதூர் பட்டம் 1945-ல் அளிக்கப்பட்டது.

மேலும் நமது நாயுடு அவர்கள் குற்றாலம் நீர் வீழ்ச்சியில் ஸ்நானக் கட்டத்தின் வசதிக் குறைவை உத்தேசித்து கோவை ஜில்லா சில முக்கியஸ்தர்களையும் சேர்த்து ஸ்நானம் செய்பவர்கள் உடைகளை அணியவும் உள்ளே தங்கவும் வசதிகளை முன் நின்று செய்திருக்கிறார்.

இதேபோன்று கரூரில் பெத்தாச்சி செட்டியார் அவர்கள் கட்டிவைத்திருக்கும். ஒவ்வொரு கட்டிடங்களையும் நேரில் பார்த்தால், ஒவ்வொரு மனிதனுடைய இருதய உணர்ச்சி பெத்தாச்சி செட்டியார் எங்கே? அவரை நாம் காணவில்லையே என்ற ஏக்கம் மக்களுக்கு உடனே பொங்கி எழுகிறது. இதோ இருக்கிறேன் என்று அவரிடம் பேசும் மாதிரி, அலைகளான, கட்டிடங்கள் தர்ம ஸ்தாபனங்கள் மக்களுக்கு பயன்பட்டு வருகிறது. பொதுமக்களாகிய சந்ததியார்கள் இன்று கரூர் வாசிகள் அனுபவித்து வரும் பெருமை பெத்தாச்சி செட்டியாருக்கே சாரும்.

நமது நாயுடு அவர்கள், தன் இருதய உணர்ச்சியின் தத்துவத்தை கண்டு, நாமும் சரி, நீங்களும் சரி, பொது மக்களும் சரி, பெருமைக்கு போற்றுவது அல்ல. காரிய சித்தியில், மக்களுக்கு பயன்படுமாறு செய்த சேவைகளை யாவரும் போற்றவேண்டியதும், நமது நாயுடு அவர்கள் நீடூழி வாழ்கவேண்டுவதும், எல்லாருடைய மனோநிலை தத்துவமாகும்.

"கம்மரவர் நிலை"

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்

வாரப்பதிப்பு.

சென்னை	சனி	15-1-49

பொங்கலோ பொங்கல்!

இந்நன்னாளில் எம்முடைய வாழ்த்துக்கள் யாவருக்கும் உரித்தாகுக. பொங்கல் திருநாளான இந்நாளில் எம்முடைய மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள் சகலருக்கும் உரித்தாகுக. எதார்த்தமும் தயாளமும் திரண்டு உருவே யெடுத்த தனிப் பெருங்குடி மக்களான திராவிடர்கள் அனைவரும் கக்ஷி பேதமின்றி, கொள்கை வித்தியாசமின்றி, மேலோர் கீழோர்என்ற பாகுபாடின்றி, உயர் குலத்தோர் தாழ்த்தப்பட்டோர் என்ற அநீதியன்றி, முதலாளி தொழிலாளி என்ற அச்சமின்றி, எல்லாரும் ஒரு மனதுடன், கிழக்கே யெழும் இளங் கதிரவன் கீழ், தத்தம் வீடுகளை அலங்கரித்து, தோரணங்கள் கட்டி, புதிதே விளைந்து வந்த அரிசியைப் புதுப் பானையிலிட்டு, சர்க்கரையுடன் நெய்யும் பாலுந்தேனுங் கலந்து பொங்கல் சோறாக்கி, புத்தாடை யுடுத்தி, பெண்டு பிள்ளை மக்கள் யாவரும் ஒன்று சேர, உண்டு களித்து, "பொங்கலோ பொங்கல்" என்றே ஆரவாரஞ் செய்து, ஆனந்தக் கூத்தாடி, வறுமையும் பிணியும் விட்டொழிந்த தென்றே புத்துயிரும் புத்துணர்ச்சியும் பெற்று புது வாழ்வு வாழ வகையேற்படும் என்ற தன் நம்பிக்கைக்கு இட மேற்படும் இத்தூய நன்னாளில் எம் உள்ளத்தினின் றெழும் கள்ளங் கபடில்லா வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக.

எமக்குப் பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பிய நேயர்களுக்கு, எம்முடைய அன்பு கலந்த நன்றியும் வாழ்த்தும் உரித்தாகுக. அரிய கருத்துக்களும் அறிவுக் கேற்ற கட்டுரைகளும், பத்திரிகை இன்னும் சிறப்புற்று பணியாற்றுவதற்காய நற்கருத்துகளும் அவ்வப்போது அனுப்பித்தந்து எமக்கு உற்ற வழி காட்டி வரும் அறிஞர்களுக்கு எம் வணக்கமும் வாழ்த்தும் உரித்தாகுக. பத்திரிகை ஆதரவாளர்களுக்கும், அனுதாபிகளுக்கும் வாசகர்களுக்கும், விற்பனைத் தோழர்களுக்கும் எம் நன்றியும், வணக்கமும் வாழ்த்துக்களும் உரித்தாகுக. எம்முடைய வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்ளும்படி ஒவ்வொருவரையும் சிரம் வணங்கி மிகமிக கேட்டுக் கொள்ளுகிறோம்.

பொங்குக மங்களம்! தங்குக எங்கும்!!

"உடுமலை பீரங்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

பொங்கற் பெருநாள் வாழ்த்து!

வழிந்தது பொங்கல் பொங்கி!
வாழ்த்தினர் பரிதி தன்னை?
தழைந்தது நெஞ்சில் இன்பம்;
தமிழர்கள் பொங்கல் உண்டார்!

தங்கள் அன்புள்ள.
தண்டாயுதம்.

மது விலக்கு 6

குடிப்பழக்கம் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வருவதென்பது உண்மைதான். அதற்குள்ள காரணத்தையும் கவர்ன்மெண்டார் கண்டறிதல் நன்று. ஒருவன் தானாக குடிப்பழக்கத்தைக் கற்றுக் கொள்வது கிடையாது. குடிப்பழக்கம் ஏற்கனவே கொண்டவர்களாலேயே பலவந்தமாக கற்றுக் கொடுக்கப்படுகிறான். ஒருவன் கடைக்குள் சென்று, குடித்த சில நிமிஷக்களுக்கெல்லாம் போதை தலைக் கேறயேற அவன் குணமும் நடவடிக்கைகளும் வித்தியாசப் படுகின்றன. எவர் வந்தாலும் யாராயிருந்தாலும் எல்லாரும் அவனுக்கு உறவினரே, நண்பர்களே, மாம மைத்துணரே வாவென்று அழைப்பான். உறவு கொண்டாடுவான். குடியென்பான். வாயை திறயென்பான். அவனும் அங்கு மிங்கு மலைவான். இடை இடை தானுங் கொஞ்சங் கொஞ்சமாகப் பார்த்துக்கொள்வான். போதை அதிகரிக்க அதிகரிக்க, கால்கள் தடுமாறி, கணகள் சொக்கி நின்ற இடத்தில் குப்புற விழுந்து கும்பகர்ணனைச் சேவிக்க கண்களை மூடுவான் இதோடு இவனதகதை. கூடியிருந்தவர்கள் எங்கே? கும்மாளம் போட்டவர்கள் எங்கே? அவரவருக்கு எற்பட்ட போதையின் காரணமாக அவரவர் ஒவ்வொரு பக்கம் மறைந்தார்கள். இதுதான் முக்கியகாரணம். குடிப்பழக்கத்தை குடியாதவர்கள் புதியதாகக் கற்றுக்கொள்வதற்கும், குடிப்பெருக்கத்துக்கும், குடும்பங்கள் க்ஷீணமடைவதற்கும், இது சற்று முக்கியமெனவே சொல்லலாம்.

பிறர் கெட வாரம்பிப்பதற்குக் காரணம் ஒருவனுக்கு, ஒரு அளவுக்குமேல் கையில் காசுள்ள அளவுக்கும் அவன் இச்சைப்படும் வரைக்கும் கிடைக்கக்கூடிய வசதியே யாகும். தனக்குத்தான் போதும் என்ற அளவோ அல்லது தனக்கே போதா அளவென்றோ இருந்தால் ஒருவன் மற்றவனுக்கு கொடுக்கவேமாட்டான். எதை வேண்டுமானாலும் பகிர்ந்துகொடுக்க முன்வரலாம். இதை விவரித்துச் சொல்லத்தொடங்குவது அவ்வளவு உசிதமல்ல வென்பதை நேயர்களே அறிவார்கள். நேயர்களுக்குத் தெரியாத இரகசியமுமல்ல. ஆனால் குடியில் மாத்திரம் பகிர்ந்து கொடுக்க ஆளில்லை யென்பதை மலை உச்சியில் நின்று சொல்லலாம்.

அதனால் அளவை திட்டப்படுத்துதல் மிக முக்கியமாகும். ஒவ்வொருவர், அதாவது குடிவேண்டுமென்போர், நாள் ஒன்றுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுதான் அடைய முடியுமென்பதாகச் செய்தல் வேண்டும். ஒவ்வொரு நாளின் "கோட்டா"வும் அந்நாளுடன் உபயோகித்தாலும் உபயோகிக்காவிட்டாலும் அந்நாளுடன் சரியாகவேண்டும். இதற்காக பர்மிட்" வழங்கபடலாம் "பர்மிட்" உள்ளவர்களும் விற்பனையாளர்களும் தவிர மற்றெவரும் கடைக்குள் இருப்பதோ அல்லது அவ்வட்டாரங்களில் சுற்றிக் கொண்டிருப்பதோ குற்றமென்றாக்கலாம். பர்மிட் உள்ளவர்கள் மாத்திரமே கடைக்குள் செல்லலாமென்றும், பர்மிட் உள்ளவர்களும் உள்ளுக்குள் சென்று குடிக்கவேண்டுமேயன்றி வெளியில் கொண்டுவரப்படாதென்றும், குடித்தவுடன் வெளியில் வந்துவிடவேண்டுமென்றும் நிபந்தனைகளை அமுலாக்கலாம். இதற்கு விற்பனையாளர்களின் ஒத்துழைப்பு அவசியம். அவர்களுடைய ஒத்துழைப்புத்தான் எதுக்கு? உண்மையாக நினைத்தால் அவர்களை படிய வைக்க நொடிப்பொழுதேயாகும் ஆனாலும், அதிலேயும் கஷ்டங்கள் பலஉண்டு எனச்சொல்லலாம். அத்தகையோர்களுக்கு அவர்களாகவே சமாதானம் சொல்லிக் கொள்ளவேண்டுமே யன்றி பிறர் சொல்ல அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். வாதத்துக்கு மருந்து உண்டு. பிடிவாதத்துக்கு மருந்து முண்டா? பாரபக்ஷமற்ற நடவடிக்கையும் கொடூர தண்டனையுந்தான் தேவை. கை விரல்களால் எண்ணி விடக்கூடிய ஒறு சிறு கூட்டத்தை கட்டுக்கடங்கச் செய்ய முடியவில்லை யென்று சொல்லத் துணிந்தால் அதற்காக வெட்கப் பட்டுத் தலைகுனிய வேண்டுமே தவிர மற்றெதுவும் நாங்கள் சொல்லத் தயாராயில்லை. அப்படிச்சொல்வது ஆட்சியாளருக்கோ மற்றவருக்கோ அழகுமல்ல. கைப்பிடியில் அடங்கும் காசாசை பிடித்தலையும் கயவர்களைக் கண்டித்து கட்டுக்கடங்கச் செய்யமுடியாதென்றால் மற்றவரை எப்படி அடக்க முடியுமென்றே கேட்கின்றோம்!!! அதற்கு மீரியும் ஒழுங்கீனம் நடைபெறலாம் என்றால் அவர்களை தலைமேல் அடித்து தட்டிக் கேட்டு, ஒழுங்குக்குக் கொண்டுவர ஒழுங்கீனர்கள், அயோக்கியர்கள் எனக் கருதப்பட்டுவரும் குடிகாரர்களே போதும். இதில் சர்க்காருக்குச் சந்தேகமே வேண்டாம்.

ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட அளவாவது உண்டு என்றால் அவ்வளவு எவருக்கும் உண்டல்லவா என்று கேட்கலாம். இதுவும் நியாயமே. "எவர்" என்பதை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அடக்க வேண்டியது முக்கியம். இம் முயற்சியில் ஆட்சியாளருக்கு தாராளமனப்பான்மை வேண்டும். திருட்டுத்தனமாகப் போய் விடுமே என்ற அச்சமே தேவையில்லை. குடிப்பழக்கம் உள்ளவர்கள் எவர்களாயிருந்தாலும், அவர்கள் எவராயிருந்தாலும். ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்ட யாவருக்கும், விண்ணப்பத்தின் பேரில் "பெர்மிட்" (அனுமதிச் சீட்டு) கொடுக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தில் "தனக்குச் குடிப்பழக்கம்இத்தனைவருஷங்களாக உண்டு" என்ற விவரத்துடனிருந்தால் போதுமானது. அத்தியாவசியம் எற்பட்டாலொழிய அதிகவிவரங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. இச் சென்னை வரைக்கும் மாத்திரம் கொண்டு வருவதாயிருந்தால் சென்னையில் எத்தனை வருஷங்களாக குடியிருந்து வருகிறார் என்ப விஷயங்களைத் தெரிந்து கொள்ளல் முக்கியம். மற்றவர்களுக்குக் அனுமதிச் சீட்டு கொடுக்க வேண்டியதில்லை.

அந்த அனுமதிச் சீட்டில் அவரவரின் புகைப்படம் பதிவிடப் பட வேண்டும். புகைப் படம் இல்லா

கேட்டியளோ சேதியை

[கம்பம் சி. நடராசன்]

பங்கஜம் :—கேட்டியின்னோ சங்கதி ?

பஞ்சாங்கய்யர் :—என்னத்தடி கேட்டியின்னோ ?

பங்கஜம் :—அரிச்சந்திரன் மயான கண்டத்திலே அரிச்சந்திரன் பொய் சொல்லவே மாட்டான் என்று எழுதிருக்கே எவ்வளவு பெரிய பொய் சொல்லியிருக்கான் பார்த்தேளா ?

பஞ்சாங்கய்யர் :—என்னடி எட்டையே பிரட்டிண்டிருக்கே அரிச்சந்திரனாவது பொய்சொல்றதாவது நீ சொல்றது தாண்டி சுத்த பொய்.

பங்கஜம் :—ஆமா, அரிச்சந்திரன் சந்திரமதியை கல்யாணம் பண்ணிக்கும் போது மணவறையிலே அக்னிசாட்சியாக முப்பத்து முக்கோடி தேவர்கள் சாட்சியாக கைவிடமாட்டேன் என்று தானே கல்யாணம் பண்ணினா அப்புறம் என் சம்சாரத்தை விலைகூறி கைவிட்டான் அது பொய்யில்லையா ?

பஞ்சாங்கய்யர் :—அடியே குடியை; கெடுத்திடுவே போல்ருக்கே சு. ம. எவனாவது இருந்தா காதில் விழப்போறதுடி அப்புறம் பத்திரிகையிலே திட்டிட போறான்கள் இங்கவாடி அதிலேதாண்டி ரகஸ்யம் இருக்கு இந்த சூத்திரப்பயல்களுக்கு தெரியப்படாதுன்னுதானே நம்ம பாஷையிலே மந்திரம் சொல்றது. உதாரணமா நான் கல்யாணம் பண்ணி வைக்கிறபோது மணப்பொண்ண பாத்து மாப்பிளைய விட்டு என்ன சொல்ல சொல்றேன் தெரியுமாடி கேளு, ஸோமஹ ப்ரதமோ, விவிதே கந்தர்வோ.

விவித உத்ரஹ த்ருதீயோ அக்னிஸ்டே
பதிஸதுரீயஸ்தே மநுஸ்யஜாஹ

இதுக்கு அர்த்தம் என்ன தெரியுமா ? சோமன் என்றதேவன் உன்னை முதலாகவும், கந்தர்வன் இரண்டாவதாகவும் அக்னி தேவன் மூன்ருவதாகவும் அடைந்த பிறகு நான்காவது, மனுஷ்ய வகுப்பைச் சேர்ந்த நான் உனக்கு நாயகன். என்று சொல்ல சொல்றேண்டி இதைதமிழில் சொன்னா நம்மள இருக்க விடுவான்களாடி ஊர்லே அதற்காகத்தான் நம்ம பாஷையிலே சொல்றது. அவன்களும் என்ன அர்த்தம்னு கேட்கவா போறானுக.

பங்கஜம் :—எத்தனை நாளைக்கு இப்பிடி ஏமாத்திட முடியும் என்னிக்காவது ஒரு நாளைக்கு அவன்களுக்கு தெரியாமலா போறப் போறது ?

பஞ்சாங்கய்யர் :—எண்டி நம்மளவா போட்ட ஆணிவேர்லே சாமான்யமாவா தெரிய போறான்கள்னு நினைக்கிறே அநேக வருஷமா அவனுகளுக்குள்ளே சண்டபோட்டு அதற்கப்புறம் ஒற்றுமை அடஞ்சு தெரிஞ்சன்னிக்கு பார்த்துக்குவோம் அதற்குள்ளதான் நாம் காலத்திற்கு எற்றாப்போல மாறிக்கிடுவோமே பிறகு அவன்கள் கூட்டத்துக்கு நாமே தலைமைதாங்கி நடத்தினா போறது பார்ரி இப்ப காந்தியை நம்மளவா எவ்வளவு தூக்கி விட்டிருந்தா நம்மகுலத்துக்கு ஆபத்துவர்றதுன்னு தெரிந்ததோ இல்லியோ தீர்த்து கட்டிபோட்டாளா இல்லியா நம்ம மேலே சந்தேகப் படாம நாமே காந்தி படத்தை தூக்கிண்டு கதர் கொடியும் பிடிச்சிண்டு, ரகுபதிராகவ ராஜாராம் பதீதபாவன சீதாராம் என்று பாடினா; சரியா போயிடுத்து சரிடி நேரமாயிடுத்து வெளியே போகணும் அந்த பஞ்சாங்கத்தை எடுடி.

பங்கஜம் :—(பஞ்சாங்கத்தை எடுத்து வந்து) இந்தாங்க வரும்போது பால் அரப்படி வாங்கிண்டு இன்னிக்கு விரதயானதுனாலே இரவு பட்சணம் போட்றதுக்கு சாமானும் வாங்கிண்டு வாங்க.

பஞ்சாங்கய்யர் :—சரிதாண்டி அடிக்கிண்டு போகாதே இன்னிக்கு நிறைய வேலையிருக்கு சாமானை வாங்கி வேலைக்காரன் கிட்ட கொடுத்தனுப்புறேன். நான் 9 மணி சுமாருக்குத்தான் வருவேன். எட்டுமணிக்கு வட்டிக்கடை வைதீஸ்வரம் பிள்ளை வருவதாக சொல்லி போனார் வந்தா இப்ப வந்திடுவார்னு சொல்லி உட்காரவைடி நானும் அதுக்குள்ளே வந்துடுறேன். அவா பெரியமனுசாள்ரி திண்ணைலே உட்கார வைச்சுடாதே உள்ளே சேர்ல உட்காரசொல்லு.

பங்கஜம் :—சரி.

——:(x):——

கண்டு பிடித்துவிட்டார்கள்

இந்திய தேசீய கீதமான வந்தே மாதர கீதம் பாண்டு வாத்தியத்தில் வாசிக்க எற்றது என்று கல்கத்தா அகில இந்திய சங்கீத மகாநாட்டுக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தை சம்பாலால்மோடி (பம்பாய்) பிரரேபித்துப் பேசுகையில் வந்தேமாதர கீதத்தை பாண்டு வாத்தியத்தில் வாசிக்க முடியாது என்று கூறப்படும் வாதம் செல்லாது என்றும் குறிப்பிட்டார்.

(அடுத்த வருஷம் நோபல் பரிசு நமது தோழர் சம்பாலால் மோடிக்குத்தான் என்கிறது குண்டாந்தடி ஆனால் இப்பெரும் அரிய விஷயத்தைக்கண்டு பிடித்தற்கு நோபல் பரிசுதானா என்று வாதாடுகிறது குட்டிச் சாத்தான்.)

——:(x):——

கூத்தா நல்லூர் இக்பால் மன்றம்

“இக்பால் மன்ற பொதுக்கூட்டமானது மன்றத் தலைவர் ஜனாப் என். எ. அப்துல் வஹாப் தலைமையில் கூடி ஐந்தாவது ஆண்டு இக்பால் நினைவு விழாவை ஜனாப் ஜே. எம். அப்துல் அஜிஸ் தலைமையில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது விழாக் கமிட்டியின் தலைவராக ஜனாப்கள் என். எ. அப்துல் வஹாபும், செயலாளராக கே. எம். எ. அப்துல் ரஹீமும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பல வெளியூர் பிரசங்கிகள் அன்று சொற்பொழி வாற்றுவார்கள் எனத் தெரிகிறது.

——:(x):——

வ. உ. சி. கப்பல்

வ. உ. சி. கப்பலை மிதக்கவிட கவர்னர் ஜெனரல் சி. ராஜ கோபாலாசாரியார் அவர்கள் வர இயலாது எனத் தெரிவித்து விட்டதாகத் தெரிகிறது.

——:(x):——

பொங்கல் நன்னாள்

ஆசிரியப்பா

பொங்கலோ பொங்கல் பொங்கலோ பொங்கல்
எங்கும் பொங்கல் என்னுந் திருநாள்
திகழுறு நற்றதைத் திங்கள் முதனாள்
பகலவ னருளைப் பண்பாய் மக்கள்
கோதிலா வழியில் கொண்டா டுகின்ற
சேதி கேண்மின் செகத்தீர் ! நிலத்தை
உழுது விதைக்க உலகம் முழுதும்
பழுது நீக்கி பைங்கூழ் வளர்ந்து
காயும் வெயிலும் கனத்த மழையும்
ஞாயிறு உதவியால் நாளும் பெற்று
செழிப்பால் உயர்ந்து செந்நெல் முற்ற
விழிப்புடை மக்கள் விரைந்து கொய்து
களத்திடைக் கொணர்ந்து கட்டி யடித்து
கலப்புடைப் பதரை காற்றால் நீக்கி
உமியைப் போக்கி உற்ற அரிசியை
அமைவாய்ப் பொங்கி அழகுறப் படைத்துப்
புதுதுகில் உடுத்துப் புத்தணர் வெய்தி
பதிதனில் எங்கும் பரப்பரப் புடனே
அந்திப் போதில் ஆர்வம் மிருந்து
நந்தம் மக்கள் நன்றி யறிதலை
பகலவன் தமக்கு பரிவாய் அளவில்
அகமகிழ் வுடனே அறிவித் திடவே
செம்மனத் துடனே சேவித்து நின்று
தெம்புளங் கொண்டு தேன்தமிழ் மொழியில்
எங்கும் புரிவர் இனியதோர் ஓசை
பொங்கலோ பொங்கல் பொங்குக என்றே !
வாழ்க்கையில் இன்பம் வளமை நாட்டில்
ஆழ்ந்த அறிவு ஆண்மை யரசு
செய்கையில் புதுமை செம்மைத் தொழிலில்
மெய்யன் புடனே மேதகம் மற்றும்
புகழ்மிக மலிவாய் பொங்கி
சுகமாய் நாமும் சுகித்திடு வோமே !

பெ. ஜெகநாதன்
(சென்னை)

இது உண்மையா?

குட்டிச் சாத்தானுக்கே

விண்ணப்பம்

1. சில நாட்களுக்கு முன் சென்னையில், கௌன்சில் மண்டபத்திற்கு எதிரில், மந்திரிகளுடைய மோட்டா ஓட்டிகளில் சிலர் சூதாடியது உண்மையா ?

2. அவர்களை ஒரு போலீஸ் சார்ஜண்டோ அல்லது போலீஸ்காரர்களோ, சூதாடும் சாதனங்களுடன், கைப்பிடியாகப் பிடித்தது உண்மையா ?

3. மந்திரிகளில் சிலரின் குறுக்கீட்டின் பேரில் அந்த டிரைவர்கள் உடனுக்குடனே விடுவிக்கப் பட்டது உண்மையா ?

4. அந்த டிரைவர்களின் பேரில் எவ்வித கேசும் பதிவாகவில்லை என்பது உண்மையா ?

5. குற்றத்தைப் பதிவு செய்ய வேண்டுமென முற்பட்ட சார்ஜண்டு வேறே எந்தவித காரணமும் இல்லாமல் வேறு ஊருக்கு மாற்றப்பட்டிருப்பது உண்மையா ?

6. ஊருக்கொரு நியாயம் சர்க்காருக்கு ஒரு நியாயம் என்று பலர் பேசிக்கொண்டும் ஊரெல்லாம் அதுவே பேச்சாக இருப்பதுவும் உண்மையா ?

“ குண்டாந்தடி ”

ஒழிக!
போட்டிப் பந்தயம்

—தி. பொ. பாண்டியன் எழும்பூர்—

மக்கள் பழக்கத்தில் உள்ள குடி குதிரைப் பந்தயம் பகுத்தறிவுப் போட்டி இவைகளினால் பொருள் மானம் அந்தஸ்து பகுத்தறிவு இத்தனையும் இழக்க வேண்டியிருக்கிறது.

குடியினால் பல குடும்பங்கள் கெட்டு அழிந்துப் போனதைக் கண்டே இருக்கிறோம். இனியும் மக்கள் அந்த நிலைமையை அடையாமலிருப்பதற்கு சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் இரண்டாம் தேதியோடு அதற்கும் முடிவு கட்டியாகி விட்டது.

குடி மயக்கம் தீராத சமயத்திலே ஆரம்பிக்கப்பட்டது குதிரைப் பந்தயம். இப்பந்தயம் சில ஆண்டுகளாக நடைப்பெற்று வருகின்றன ஒரு ஆண்டில் ஆறு மாதம் நடைபெறும். பிறகு ஆறு மாதம் ஓய்வு பெற்றுக்கொள்ளும். எதற்கு ஓய்வு? அடுத்த ஆண்டில் ஆரம்பிக்கப்படும் ரேஸுக்கு பணம் சேகரிக்க.

இப்பந்தயத்தில் சாதாரண ஏழை பாட்டாளி முதல் பெரிய பணக்காரர் வரை கலந்துக் கொள்கிறார்கள். வாரத்திற்கு இருமுறை ரேஸ் என்றால் மாதத்திற்கு எட்டு முறை. ஆறு மாதத்திற்கு 48 தடவைகள். ஒரு தடவைக்கு நுழைவுக் கட்டணம் ரூபா 2.8.0. ஆனால் 48 தடவைக்கும் 120 ரூபாயாகிறது. பந்தயம் கட்டுவது குறைந்தது ஐந்து ரூபாயிக்கு மேல்தான் கட்டியாக வேண்டும். அதற்குமேல் கட்டுவதென்றால் அது அவரவர் நிலைமைக்குத் தகுந்தாற்போல், இத்தனைக்கும் முதலில் தன் கைவசம் உள்ளவை, பிறகு பெண்டு பிள்ளைகள் நகைகள், போதாதற்குக் கடன், இத்தனையும் தொலைத்து வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வகையின்றி பல குடும்பங்கள் நசித்துப் போயிருப்பதை அறிந்தே இருக்கிறோம். இதனால் மக்களுக்குத் தீமையே என்பதை யாரும் மறுக்க முடியாது. கதைக் குதிரைப் பந்தயம் என்பதை விட மாபெரும் சூதாட்டம் என்றே கூறலாம்.

அடுத்தது பகுத்தறிவுப் போட்டி இப்போட்டியில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தான் கலந்துக் கொள்கிறார்கள். குதிரைப் பந்தயத்தால் மக்களுக்குப் பணம் மாத்திரம் நாசமாக்கப் படுகிறதென்றால், இதனால் பணமும் பகுத்தறிவும் நாசமாக்கப்பட்டு வருகின்றன.

பகுத்தறிவுப் போட்டியை ஒரு சில பத்திரிகைகள் வெளியிட்டு வருகின்றன. தமிழ் நாட்டிலே மிக முக்கியமானது 'ஆனந்த விகடன்' இதிலே துணுக்குக்களும், பகுத்றிவுப் போட்டி ஒன்ற சூதாட்டமும் சேர்ந்திருப்பதே முக்கிய காரணம் என்று கூறிவிடலாம். மக்களும் இதைத் தானே விரும்புகின்றனர். இப்பத்திரிகையை வாங்கும் அன்பர்கள் இதிலுள்ள போட்டிப் பந்தயத்தில் கூப்பன்களை பூர்த்தி செய்து கட்டணத்துடன் அனுப்பிவைக்கிறார்கள்.

ஒருவரே எத்தனை விடைகள் வேண்டுமானாலும் தயாரித்து அனுப்பலாம் என்ற நிபந்தனையின் பேரில் சரியான விடையை எதிர்பார்த்துப் பல கூபன்களை தயாரித்து அனுப்புகிறார்கள். ஒரு தடவை இப்போட்டியில் கலந்துக் கொண்டால் அத்துடன் நின்றுவிடுவதுமில்லை. மறுபடியும் கலந்துக் கொள்ள தூண்டுகிறது. பணத்தாசையின் காரணமாக.

சாதாரண ஏழை குமாஸ்தாக்கள் சம்பாதிக்கும் பணம் தன் குடும்பத்தையோ நடத்துவதற்குப் போதாது என்ற நிலையிருக்கும்போது; இப்போட்டியில் ஈடுபட்டு பணத்தை இழக்கிறார்கள். இவர்கள் வாழ்க்கை துணைவியர்களும் இப்போட்டியில் கலந்துக் கொள்ளுகின்றனர். போட்டியின் விடையை கண்டுபிடிக்க இவர்கள் நேரத்தையும் வீணாக்குகிறார்கள். இதனால் தம்பதிகளுக்கு மனஸ்தாபம் அதிகமாக வளருகின்றன. இதனாலேயே பல குடும்பங்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகின்றன. மக்களை இவ்வளவு சூழ் நிலையில் கொண்டு போகும் இப்பந்தயங்களை என் அரசாங்கம் நிறுத்திவிடக்கூடாது? என்று நினைக்கலாம். இதை யார்தான் வேண்டாம் என்று மறுத்துக் கூறமுடியும்? ஆனால் ஆளவந்தவர்களுக்கு இவை எங்கே தெரியப் போகிறது?

சமுதாய சீர்திருத்தம் செய்து வரும் திராவிட கழகத்தின் பேரிலும், இதை ஆதரித்து தொண்டு செய்து வரும் சீர்திருத்த நாடகங்களுக்கும், காவியங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் 144 சட்டம் போடவும் ஜாமீன் கேழ்க்கவும், மக்களிடத்தில் ஏற்பட்டுள்ள மூட பழக்க வழக்கங்களை அழித்தொழிக்க அறிவுப் பிரச்சாரம் செய்து வரும் பகுத்தறிவு வாதிக்கு வாய்ப் பூட்டுச் சட்டம் போட தெரியுமேயன்றி குதிரைப் பந்தயத்தாலும், பகுத்தறிவுப் போட்டியினாலும் மக்கள் கெடுவதை என் கவனிக்கப் போகிறார்கள்?

பொதுமக்கள் நன்மையை கருதும் சுயராஜ்ய சர்க்கார் இதைத் தடுக்க உடனே தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமும் அவசரமுமாகும். இப்போட்டிகளை ஒழிக்க தகுந்த சட்டம்கொண்டு வர வேண்டும். குதிரைப் பந்தயத்தினாலாவது அரசாங்கத்தாருக்கு வருமானம் உண்டு. போட்டிப் பந்தயத்தால் அதுகூட கிடையாது. இப்போட்டியை யார் வேண்டுமானாலும் எந்தவிதத்திலும் நடத்தி பணம் சம்பாதித்துக் கொள்ளலாம். இதற்கு கட்டுப்பாடே கிடையாது.

ஜமீன் ஒழிப்புச் சட்டம் மது விலக்குச் சட்டம், சினிமாப் படத்தின் நீளத்தையும் நேரத்தையும் கட்டுப்படுத்தி சட்டமாக்கப்பட்டிருப்பது போல், இந்த ராமராஜ்ய சர்க்காருக்கு வால் பிடிக்கும் சென்னை மாகாண சர்க்கார் குதிரைப் பந்தயத்திலும், பகுத்தறிவுப் போட்டியிலும் உடனே கவனம் செலுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம்.

மூளைக்கு வேலை

பகுத்தறிவுப் போர்க்களம் 2

விஷயம்:—சினிமாப் பட நீளத்தை 15000 அடிக்குமேல் இருக்கப்படாதென்றும் ஓடும் நேரம் மூன்று மணி ஆகப்படாதென்றும் சர்க்கார் அவர்கள் சட்டம் கொண்டு வருவது அவசியமா? நியாயமா?

நேயர்களின் கருத்துக்கள்

ஆசிரியர் அவர்களுக்கு;—

சினிமா படத்தின் நீளத்தை 15000 அடியாக சர்க்கார் செய்து இருக்கும் கட்டுப்பாடு அவசியம் வேண்டும் ஏனென்றால், படங்கள் நீளமாய் இருப்பதால் அதில் ஆபாசமான காக்ஷிகளையும், பொருத்தம் இல்லாத இடங்களில் பாட்டுக் கச்சேரிகளையும் புகுத்தல் படத்தை சுவாரஸ்யம் இல்லாமல் செய்து விடுகிறார்கள் இன்னும் சிலர் யாராவது ஒருவர் தன் படத்தில் புதிதாக ஒன்றை சேர்த்தினார் என்றால் அதற்குப் பிறகு வெளியாகும் படங்களில் அந்த காக்ஷிகளை காப்பி அடித்தும் படத்தை கொலை செய்து விடுகிறார்கள். ஆகவே நீளக் கட்டுப்பாடு இருப்பதால் இம்மாதிரி பிரயோஜன மற்றவைகளை படம் பிடிக்காமல் நல்ல முறையில் 15000 அடிக்குள் படத்தை எடுத்து முடிக்க முற்படுவார்கள்.

தற்சமயம் மேல் நாட்டில் 50000 அடிகளில் தயாரித்த ஒரு படத்தை 12000 அடியாக மாற்றியிருக்கிறார்கள். படம் குறைந்திருப்பதினால் அதன் மதிப்போ அல்லது அதனுடைய வசூலோ குறைந்து விடும் என்று சொல்வது அர்த்தமற்றது. பட முதலாளிகள் புராணப் படங்களைப் எடுப்பதைக் காட்டிலும் 15000 அடிக்குள் சமூகப் படங்களை நல்ல முறையில் தயாரிக்க முடியும். ஆகவே சர்க்கார் செய்திருக்கும் கட்டுப்பாடு மிக, மிக அவசியம் என்று நம்புகிறேன்.

வணக்கம

M. S. மணி உடுமலை

—:o:—

ஆசிரியர் அவர்கட்கு,

நாள்தோரும் ஆண்கள் பெண்கள் சகலரும் ஆயிரக் கணக்கான மக்கள் பார்த்துவரும் இந்த படக் காட்சிகள் முதலில் அறிவுக்கு பொருத்தமானபடமா? உலகம் ஏற்கும்படமா? மனித தன்மைக்கு பொருந்தக் கூடிய படமாக உள்ளதா? என்று தான் முதலில் பார்க்க வேண்டும். இன்றைய தமிழ் படம் கருத்திழந்த படமாகவும் கவனிப்பாரற்ற படமாகவும் பகுத்தறிவு, பணம் பாழாக்கப் பட்ட சூதாட்ட நிலை போன்றது தற்கால தமிழ் படம்.

புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் கூறுவது போல ஏன் தமிழர் படமெடுக்க ஆரம்பஞ் செய்தார்; எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாக. ஒன்றேனும் தமிழர் நடையுடை பாவனைகள் உள்ளதுவாய் அமைக்கவில்லை. உயிர் உள்ளதில்லை என்ற நிலையில் தான் உள்ளது தமிழ் படங்கள். பட முதலாளிகள் பணம் முக்கியம் எனவும்; நடிகர், நடிகைகள் வேலைக்கு தகுந்த கூலி என்ற எண்ணத்திலேயும் பகுத்தறிவுக்கு பயன் படாத பழங்காலத்து கதைகளை காட்டி கருத்தைமாற்றி ஏமாற்றி திரிகிறது இன்றைய படங்கள். விஸ்வாமித்திரா, ஹரிச்சந்திரா, கந்த லீலா, வள்ளி முருகன் இவை போன்ற பல படங்களில் என்ன நீதி கற்றார்கள் மக்கள். இவைகளினால் ஆட்சியாளருக்கு அயோக்கியதனமாக ஆண்டவன் போல அலங்காரம் வேடம்போடுவது இவை தேவை இல்லை என அறிந்துள்ளார்கள் என்பது மகிழ்ச்சியே.

இன்னும் இன்றைய படங்களில் உதாரணமாக "1000 தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி" இதன் கதையமைப்பின்படி 1000 தலைகளை அறிவுள்ள அழகிய ஒரு மங்கை தன் சபதத்தால் வீழ்த்தினால் இன்றைய அரசாங்கமோ உலகமோ சம்திக்குமா? இது தேவையா? எனவே இது போன்ற ஊழலே உருவான இன்றைய தமிழ் படங்கள் எல்லாம் ஒழிக்கப்படல் வேண்டும் அறிவுக்கும் மனிதத் தன்மைக்கும் பொருத்தமான படங்கள் தேவை. படத்தின் நீளம், காலம் இதனை கவனித்த அரசாங்கம் படத்தின் நீதி கருத்து நிறைந்துள்ள படமாக வெளிவியிவதைக் கவனிக்க வேண்டும்.

4-ம் பக்கம் தொடர்ச்சி

அனுமதிச் சீட்டுகள் செல்லுபடியாகக் கூடாது. புகைப் படத்தின் பாகத்தின் பேரிலும் அனுமதிச் சீட்டின் பாகத்திலும் பதியக் கூடிய வண்ணம் ஆட்சியாளரின் அல்லது அவர்களால் நியமிக்கப் படுபவர்களின், முத்திரை போடல் வேண்டும். மூன்று வருஷங்களுக்கு ஒரு முறையோ ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறையோ அல்லது எதிர்பாரா சம்பவத்தாலோ அல்லது எப்படியோ முகத் தோற்றத்தில் வித்தியாசம் ஏற்பட்டால் அக்காலங்களிலும் புதியதாக புகைப் படம் பிடிக்கப்பட்டு ஒட்டப்பட வேண்டும் என்று, அவசிய மென்று கருதினால், செய்யலாம். இது ஆரம்பத்துக்கு ஆள் மாராட்டத்தைத் தடுக்கும் முறையாகும். என்றாலும் முதல் ஓரிரண்டு வருஷங்களுக்கே தேவையாயிருக்கும். அதன் பின் எவ்வித தடுக்கு முறையும் இது விஷயத்தில் தேவையில்லை என்பதை ஆட்சியாளரே தெரிந்து கொள்வார்கள். ஒவ்வொரு அனுமதிச் சீட்டுக்கும் ஒரு சிறு தொகை, அதாவது எவரும் எழிதில் செலுத்தக் கூடிய தொகையை இதில் கட்டணமாக ஏற்படுத்தலாம். இது விஷயத்தில் சர்க்காருக்கு ஏற்படும் செலவுகளை இக்கட்டண வசூல்களே சரிக் கட்டிக் கொடுத்துவிடும்.

திராவிடர் திருநாள்.

பொள்ளாச்சி, பொன்னுச்சாமி.

வாழிய பொங்கல்! வாழிய தமிழ்மொழி!
வாழிய தமிழகம்! வாழிய தமிழிசை!
மஞ்சளும், இஞ்சியும், வானுயர் கரும்பும்,
செந்நெல் அடிசிலும், தீங்கனி பிறவும்
நிலமகள் தந்த வளனெனப் போற்றும்
செந்தமிழ்த் திருநாள் சிறப்புற வந்ததால்;
பொங்குக பொங்கல்; எங்கணும் நன்குற!
தமிழ்மொழி தமிழ்க்கலை, திராவிடர்தம் நாடு
உரிமை பெற்று உலகினில் மிளிரவும்
ஆண்மை சிறக்கவும், அறம்பல பெருகவும்
நாடும், மக்களும் நலமெலாம் பெறவும்
வாழிய பொங்கல்! வளம்பல பொழிந்தே.

ஒரு குண்டு

உடுமலை. மதி.

நிலவின் நீண்ட ஒலி இம் மாநிலத்தின் அழகை உறை கல்லில் உறைத்து உற்று நோக்கிக் கொண்டிருந்தது. நீலோற்பல மலர் பச்சை வானிலே நட்சத்திரம்போல் காட்சி அளித்தது. வெண்கதிரில் வெளுப்புற்றிருந்த வெள்ளி நாடாப்போன்ற மாதை ஒன்று அப்பரந்த பச்சை நிலத்திலே பாய்ந்தோடும் அம்பென தோற்றமளித்தது. மல்லிகையின் மணம் மனதை கொள்ளை கொண்டது. முல்லையின் மணம் மூலை முடுக்கெல்லாம் மூடிக்கொண்டிருந்தது. அல்லி மலர் ஆனந்தமாக தென்றலில் அசைந்தாடிக் கொண்டிருந்தது. சூரியகாந்தி சுருங்கி, வெட்கி, தலை குனிந்து, தாழ்ந்து நீநிலத்தை தன் கடைக்கண் பார்வையால் பார்த்துக் கொண்டிருந்தது. எங்கும் நிறைந்த நிசப்தம் நிலத்திருந்தது. ஆந்தையின் அலறல் ஆழ்ந்த அமைதியை அதிகப்படுத்தியது. ஆம்! ஆந்தையின் அலறல் மட்டுமில்லை, வேறொரு சப்தமும் கேட்கிறது. கேட்கும் சப்தத்தினின்றும் அது குதிரையின் காலடிச் சப்தம் தான் என்று தீர்மானிக்க வேண்டும் அதோ உண்மையாகவே ஓர் வெள்ளைக் குதிரை காற்றினும் கடிந்து பறந்து வருகிறது. அத்தோற்றம் வானில் ஓடும் சந்திரனுடன் போட்டி இடுவது போல் இருந்தது. குதிரையின் காலடி சப்தம் டக்! டக் என்று காலத்தின் காலனை அறிவித்தது. மரமும் கொடியும் பின்னி நின்று காற்றில் ஆடிய காட்சி ஒருமணப்பட்ட காதலர் பாதையின் இருமருங்கும் நின்று வீரனை வாஞ்சையுடன் வரவேற்பது போன்றிருந்து. பீடுநடையும், தடைபடா குறுதி ஓட்டமும், எடுப்பும், எழிலும், மிகுந்த பார்வையும் அகண்ட மார்பும் அதன் மீது வெண்ணிலவில் எடுப்பாகத் தெரிந்த கருந்துகிலும் துவள வன்மை வாய்ந்த ஓர் வாலிபன் அக்குதிரை மீது தோற்ற மளித்தான். அவன் முகம் வெண்கலைத் திங்களில் வெள்ளித்தகுடெனத் திகழ்ந்தது. அவ்வீரன் முகத்தில் லக்ஷ்ய புன்முறுவல் பூத்து நின்றது. அழகிய அவன்முகம், தான் திராவிடத்தாயின் தனி மகன் என்று பறை சாட்டியது.

நிலவு தோய்ந்த இரவினில் வானத்தின் வளர்ச்சியை கணக்கெடுத்துக் கொண்டிருந்தது விக்கிருமபுரி கோட்டையின் செறிந்த ஞாயிலும், வான் தோய் வன்ன புரிசையும், குண்டுகன் அகழியும் மிடைந்த காடும் கொண்ட அந்த விக்கிருமபுரி கோட்டையின் கோடிவாயிலிலே இருவர் பேசும் குரல்கேட்டது. ஆம்! அமைச்சர் சூதகேசவனும், மன்னன் ராமபத்திரனும் உரையாடிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் பின் வருமாறு உரையாடினர்.

அமைச்சன்:—மூவுலக முடிமன்ன! ஸ்ரீ ராமபிரானின் கருணை பெற்ற கலைகடலா! தாங்கள் கூறினீரே அந்த சூத்திரனாகிய மதி வாணனை மடக்க முடியாதென்று; எப்படி முடிந்தது?

மன்னன்:—ஆரிய சூரியனைக் கண்டால் சூத்திரப் பனி மாயமாய் மாறாமல் வேறென்ன செய்யமுடியும்.

அமைச்சன்:—புல்லேந்தும் கையிலே: வேலேந்தாமலே வலை விரித்து இந்த வையகத்தையே மாற்றும் மாண்பு மிக்க சாமார்த்தியம் இச் சூதகேசவனுக்கு இல்லாம் தங்கள் சமூகத்தில்... , ...,

மன்னன்:—சூதின் மன்னனான சூதகேசவன் என்கையில் இருக்குமட்டும் எனக்கென்ன குறைவு? ஆசூரை விக்கிருமபுரியாக மாற்றுவது மட்டுமென்ன! இந்த பார் முழுதும் கட்டி ஆள மாட்டேனே! இன்று மதிவாணனை கூற்றுவனின் வாயில் நம் வஞ்சகத்தால் விழச் செய்த நாம் எதைத்தான் செய்து முடிக்க முடியாது? அதிருக்கட்டும் பஜனைமடங்கள் கட்ட ஏற்பாடாகி விட்டனவா!

அமைச்சன்:—இந்நகரில் இருந்த 216 பாசறைகளும் பஜனை மடங்களாக மாற்ற துரிதமான ஏற்பாடு செய்துள்ளேன்.

மன்னன்:—சபாஷ்! நல்லது.

அமைச்சன்:—மன்னர்க்கு மன்ன! நாம் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும், இத்தேசத்து சேனாதிபதி இளவழுதி எங்கோ மறைந்து விட்டான், அவனால் நமக்கு எப்போழுதும் ஆபத்து வரலாம்.

மன்னன்:—ஆம்! இருந்தாலும் அவன் நம்மை இனி வெருட்டுவது என்றால் மலையை மனிதன் நகர்த்துவது போலாகும். எதற்கும் நம்மவருக்கும் அவர்களுக்கும் வித்தியாசம் தெரியக் கூடாது. இதற்கு என்ன யோசனை?

அமைச்சன்:—அதுவா இந்த சூதகேசவனுக்கு சொல்ல வேண்டும். வாருங்கள் இன்று நகர் சோதனைக்கு சூத்தராள் வசிக்கும் வீதிப்பக்கம் சென்று பார்க்கலாம்.

நகர் சோதனைக்குப் பின்

மன்னன்: அமைச்சரே இதென்ன எல்லோரும் நம்மவர்போல் பூநூல் தரித்தும், புடவையுடுத்தியும் காணப்படுகின்றனர். பார்ப்பதற்கு இவர்கள் பார்ப்பனர் போலவே தோற்றமளிக்கின்றனரே!

அமைச்சன்:—ஆம் அரசே! இது தான் சூதகேசவனின் சூழ்ச்சி.

நாடா போன்ற பாதையில் பாய்ந்து வந்த அவ்வீரன் ஓர் மலைச்சாரலை சேர்க்கிச்சென்ற கிளை பாதை வழியாக தன் குதிரையைத் திருப்பி வாயுவேகமாக மலை அடிவாரத்தை அடைந்தான். அங்கு முட்களும், புதரும், தென்னையும், கமுகும், மாவும், பலாவும் ஒன்றை ஒன்று அணைத்து முத்த மிட்டுக் கொண்டிருந்தன. ஒரே இன்ப வாருதி அணைத்தமரங்களின் கீழ்போது மலர் மலரும் காட்சி காதலருக்கு வாய் திறந்து ஆசி கூறுவது போன்றிருந்தது. காதலரை பிரிக்க மனமின்றி பிரிப்பவன்போல் அவ்வீரன் பின்னிக் கிடந்த கொடிகளையும் முட்புதர்களையும் சிரமத்துடன் நீக்கிக்கொண்டு ஓர் காட்டாரின் பக்கம் அடைந்தான். தன். பெருதற்கரிய வெள்ளை குதிரையை அவ்விடத்தில் ஓர் மரத்தில் கட்டி விட்டு, காட்டாரின் கரையை அடைந்தான். அக்கரையில் இருந்த ஒரு மரத்தினின்றும் கட்டப்பெற்ற நீண்ட கயிற்றின் நுனியை பிடித்து; ஒரு உதைச்சலில் மறு கரையிலிருந்த மற்றோர் மரத்தில் கட்டப்பெற்ற கயிற்றை கைப்பற்றினான், பின் கீழிறங்கி ஓர் நடைபாதை வழியாக சென்று ஓர் பெரும் பாறையை அடைந்தான். பின்பு அதன் வாயிலில் நின்று ஓ! என்று உறக்க கத்தினான். பட! பட! என்ற பெரிய முழக்கத்துடன் பாறையின் ஓர் சிறு பகுதி திறந்தது. வீரன் ஒரே பாய்ச்சலாக பாய்ந்து உள் சென்றான். உள் சென்றதுதான் தாமதம் அங்கு கருப்பு உடை தரித்திருந்த இளஞ்சிங்கங்கள் எடுப்பான குரலில் எண்ணிக்கையற்ற வினாக்களை விடாமல் வினவினர் —'அண்ணா! நம் நாட்டு பாசறைகள் யாவும் பஜனை மடங்களாக மாறிவிட்டனவாமே'?—'வில்லும் வேலும் விளையாடிய வீதிகளில் வேதவிற்பனர்கள்: என்ன கீழ்நிலை' என்ற கர்ஜனை—'படையாளர் நடமாடிய அரண்மனையில், பட்டை நாமங்கள் உலவுகின்றனர் ஆகா! என்ற அலறல் வீர ஊற்றூகிய நமது பள்ளிகளில் பஞ்சாங்கம் பார்ப்பதார்க்கும், பாராயணம் பண்ணுவதார்க்கும் பயிற்சி என்னநிலை' என்ற எக்கக் குரல். 'அமைதி!' என்ற வேத வீரனின் வாயினின்றும் பிறந்தது. உடனே ஒரே நிசப்தம் நிலவியது. 'தோழர்களே! என் மனம் மடிந்தது என்று கூறலாம். தேசத்திற்கு உற்ற ஒவ்வோர் புண்ணும் என் மனதில் மாறாத புண்ணை உண்டாக்கி விட்டது." என்று துன்பத்தில் துடித்துரை செய்தான்.

(சிலநாட்களுக்குப்பின்)

வீணரின் வீடாகிய விக்கிரம புரியின் முதல் வாயில் மணி இரண்டாம் ஜாமத்தின் இறப்பை அறிவித்து ஓய்ந்தது. காரிருள் எங்கும் கடுகிஇருந்தது. மின்னல்கள் அவ்வப்போது காரிருளை கண் சிமட்டச் செய்தன. வானத்தில் இடித்த இடிமுழக்கம் வையகத்தில் பன்மடங்கு அதிகமாக எதிரொலிக்கும்படி செய்தது கோட்டைமலை. மான்கள் தங்கள் இருப்பிடம் பெயர்ந்து காடெங்கும் கடுகிப் பாய்ந்தது. பறவைகள் தங்கள் சிறகினை விரித்து அதனால் தங்கள் குஞ்சுகளைக் கூட்டின. ஆந்தையும் கோட்டானும் போட்டியிட்டு அலற ஆரம்பித்தன. இயற்கையின் இப்பேற்பட்ட பின்னணியுடன் ஓர் கருத்த உருவம் மேல் சொன்ன பாறையிடத்தினின்றும் பதுங்கி பதுங்கி சென்றது. காரிருளில் கருப்புச் சட்டை அணிந்து கடுகிச் செல்பவன் கனக சுந்தரர்தான்—விரிந்த வுள்ளத்தினையுடைய வீரனின் வீரருள் ஒரு வீணன், வஞ்சகன், கை பொன்னுக்கு கை பொம்மையான கயவன், தீண்டா விளக்காகத் திகழும் திராவிடத்தின் திரியை திருகி எறிய எத்தனிக்கும், ஆரியத்தின் அடி வருடும், வஞ்சகத்தில் வல்ல குலத்தின் குல மணி, அப் பிராந்தியத்தில் சூழ்ந்திருந்த இருட்டினைப்போல் அவன் மனத்திலும் இருள் படர்ந்திருந்தது. செய்நன்றி கொன்றை கொடியோன் ஓட்டமும் நடையுமாக நாராயண நம்பிகள் இருக்கும் இருக்கையை அடைந்தான். நகர் சோதனைக்கு புறப்பட்டிருந்த புல்லர்களை புன் முறுவலுடன் சந்தித்தான். சூதகேசவனின் சூழ்ச்சியை சுருக்கமாக சுருக்கித்தந்தான் சுய உணர்வற்ற சுந்திரன்.

வானத்தின் வளர்ச்சியுடன் இருளில் போட்டியிட்டுக்கொண்டிருந்தது கோடைமலை மலையின் மங்கிய தோற்றம் மனதில் ஓர் பயங்கர பரபரப்பை உண்டாக்கியது. வீரனின் குகைப்பாறை குன்றுபோல் தோற்ற மளித்து நின்றது. அமைதியை அவதிக்குள்ளாக்கும் சல சலப்புச் சப்தம் சண்ட மாருதம் போல் பெருகிற்று. ஆம் கரிய உருவங்கள் கனமான ஒன்றை இழுத்து வருவது கண்ணுக்கு புலப்படுகிறது. சூதகேசவனின் சூது, சுந்தரத்தின் அழிவு, பட்டை நாமங்களில் பழி வாங்கும் உணர்ச்சி இவையாவும் ஒன்று திரண்டு ஆண்மையின், வீரத்தின், உண்மையின் உரையிடமாகிய குகை பாறையின் முன் ஓர் பீரங்கி உருவாக வந்து நின்றது. வானத்தைப் பிளக்கும் ஓர் சப்தம்! மலையெங்கும் எதிரொலி! பாறை பார்பனரின் பீரங்கிக்கு பொடியாகியது. குறுதி வெள்ளத்தில் குன்றனைய தோள்கள்கொண்ட செம்மல்கள் செற்றமிழந்து, உண்மை அழிய, பார்ப்பனரின் பத்தாம் பசலித்தனம் நிலவ, திராவிடம் திண்டாட ஆரியம் ஆட இயற்கை எய்தினர். மிகுந்த சிலர் மிருகத்தனமாக கொல்லப்பட்டனர்.

(பல ஆண்டுகள் பறந்தோடின)

ஓர் மறுமலர்ச்சி, இருண்ட வானில் மின்னல் தோன்றியது. தேசிழந்து கிடந்த சந்திரன் தேசுற்ற மேகங்களினின்றும் மேலே கிளம்பி விட்டான். அன்று கருப்புச் சட்டை அணிந்த தங்கள் குறுதி வெல்லத்திலே மாண்ட மாட்சிமையை காட்டுகிறது நம் மணிக் கொடியின் நடுவிலே நமக்கு காட்சி அளிக்கும் தூயசிகப்பு. அன்று அவர்கள் சிந்திய இரத்தம், அன்று அவர்கள் அணிந்த அந்த கருப்பு உடையையே இன்றைய சீர்பெற்ற சீர்திருத்தம் எற்றுக்கொண்டுள்ளது. அன்று அவர்கள் கண்ட கனவு, இன்று நினைவு உலகாக மாறுகிறது. அன்று அவ்வீரன் இருந்த இடத்தில் இருந்துகொண்டு நமது தளபதி அறப்போர் முரசு கொட்டுகிறார். அண்ணாவுக்கு வெண்தாடிவேந்தர் நமது தந்தை அவ்வப்பொழுது வழி காட்டி வருகிறார். சூதகேசவனின் சூழ்ச்சியையும் அவனுக்கு ஐந்தாம் படையாக அமைந்த சுதந்தரத்தின் சூழ்ச்சியும்சுக்கு நூறாக்கப்படும். ஆரியப் பிணியை அறப்போர் மருந்துண்டு நீக்குவோம் நீக்குவது மின்றி நிலைநிறுத்துவோம். புரட்சிக்கனல் பரவட்டும்! வாழ்க வளமார் எம் திராவிடம்.

இப்படிக்கு
உடுமலை 'மதி'

——:(o):——

திராவிடர் திருநாள்!

தனமனோகரன்

——: (x) :——

இன்றமிழ்க் கலைகள் வாழ்க! எழிற்றமிழ்நாடு வாழ்க!
அன்பறம்வாழ்க! தொன்மை ஆண்மை பண்பும்வாழ்க!
மன்பதைத்தலைவர் வாழ்க! மழைவளம் வாழ்க! தூய
பொன் கதிர் செல்வன் வாழ்க!
'பொங்கலோ பொங்கல்' வாழ்க!

தொடர் கதை

லக்ஷம் ரூபாய் நக்ஷத்திரம்

:(x):

[முன்னவாரத் தொடர்ச்சி]

["பிவியார்"]

புதிய இடம், புதிய ஆட்கள் கொஞ்சம் தயக்கம் ஏற்படுவது சகஜம் தான் இரண்டொரு நாளில் எல்லாம் சரிபட்டுப் போகும்" முதலாளி சந்தோஷம் வந்து---என் நிற்கிறீர்கள்? இங்கே மரியாதை கூச்சம் தயக்கம் எல்லாம் தேவையேயில்லை. இது சமத்துவக் கோயில். கலைக் கோட்டம். இங்கு கூலிக்காரனானாலும் சரி, கோமானானாலும் சரி, எல்லாம் ஒரே நிரை, ஒரே கனம் தான்! என்று சொல்லிக் கொண்டே முதலாளி தங்கம்மாளின் கையைப் பிடிப்பவன் போல் இரண்டடி முன் வைத்தான். தங்கம்மாள் நிலைமையை உணர்ந்து விரைந்து பதுங்கி எதிரே ஒரு ஆள் உட்காரத் தகுந்த கைப்பிடியில்லாத சிறு நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

"அடடா இப்படி வெல்வெட் சோபாவில் அமருங்களேன். நாற்காலிகள் முக்காலிகள் எல்லாம் நம்மைவிட கீழ்த்தரமானவர்கள் வந்தால் உட்கார" என்றார் டைரக்டர். "இப்போதைக்கு நான் உங்களைவிட கீழ்த்தரம் தானே" என்று நகைச்சுவையுடனும் கொஞ்சலாகவும் சொல்லியபடி தங்கம் உட்கார்ந்த இடத்திலேயே இருந்தாள். முதல் பாடம் ஆரம்பத்தில் பலாத்காரமோ மிரட்டலோ காட்டலாகாது என்று எண்ணியவர் போல் முதலாளி "சரி எல்லாம் உங்கள் இஷ்டம். உங்களைத் தட்டிக் கேட்க இங்கே யாருக்கும் அதிகாரமில்லை. சரி வந்து, உம்மை புகழின் உச்சாணிக் கொம்பில் ஏற்றி வைக்க உத்தேசம், சம்மதம் தானே?

தங்கம் அதற்கும் சம்மதம் கேட்க வேண்டுமா? அல்வா தின்பதற்கு கைக்கூலிக் கேட்பார்களா?

முதலாளி:— உன் உடல் அழகைப் போன்ற புத்தியழகும் இருப்பது விசேஷ சக்தி' அபூர்வ இணைப்பு! நீயே பார்த்தாயல்லவா நேற்று' அந்த கரிக் கட்டை பெண் தடிமரமாட்டம் ஆக்டு பண்ணினதை? தெய்வம் போல நீ வந்து சேர்ந்திருக்காவிட்டால் எத்தனையோ லட்சம் பாழாகியிருக்கும்' இப்போது அவளை டிஸ்மிஸ் செய்து விட்டு உன்னை மெயின் ஆக்டராக்கியிருக்கிறேன். நாளை முதல் ரீடேக்கிங் நடத்த ஏற்பாடு செய்துவிட்டேன். இந்தப் படத்திலேயே நீ புகழின் உச்சிக் கொம்பை எட்டிப் பிடித்து விடலாம்" என்றார். தங்கம்மாள் சந்தோஷம் முகத்தில் துள்ளி விளையாட தலை குனிந்தபடி எதிர் பெசாது அமர்ந்திருந்தாள். முதலாளி மெல்ல எழுந்து வந்து தன் தோளில் கைபோட்டபோதுதான் அவள் கற்பனை ஆகாய லோகத்திலிருந்து மீண்டும் தன் உணர்ச்சி பெற்றாள். முதலாளியின் கைபட்டதும் தங்கம்மாளின் உடல் கொள்ளிக்கட்டைபட்டதுபோல் துடித்தது. முகம் திகிலால், தண்ணீர் ஊற்றி அவித்த நெருப்புக் கரியோல் கறுத்தது. இதைக் கண்டதும் முதலாளி தன் கையை சடக்கென அகற்றிக் கொண்டு இதென்ன எடுத்ததற்கெல்லாம் பயப்படுகிறாயே? அறியாத குழந்தைபோல் தொட்டால் சிணுங்கியாக இருக்கிறாயே விபரீத நினைப்பெல்லாம் நினைக்க வேண்டாம். ஒரு ரகசியம் சொல்ல வெண்டும். உன் விஷயமாக சில முதலாளிகளிடம் இராத்திரியே போன் மூலம் பேசினேன். உன்னைக் கொண்டு புதுப்படம் எடுக்கப் பணம் தரவும் சம்மதித்திருக்கிறார்கள். உன்னைப்பார்க்க இன்னும் கொஞ்ச நேரத்தில் வருவார்கள். நீ அவர்களைக் குல்லாப் போடும் முறையில் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளவேண்டும். உன் ரேட் பற்றி கேட்டால் படத்திற்கு இரண்டு லட்சம் ரூபாய் என்று துணிந்து கேள். மற்றவைகளை நான் பார்த்துக் கொள்கிறேன். சீக்கிரம் குளித்து சிங்காரித்துக் கொண்டு தயாராக இருக்க வேண்டும்.

அவர்களை மயக்குவதென்றால் ஆரிய வித்தை ஒன்றும் தேவையில்லை. ஒரு புன்சிரிப்பு, ஒருகண்சிமிட்டு, ஒரு கொஞ்சல்மொழி எல்லாம் உங்கள் தயவு உன்ற மோகன மந்திரம் இவ்வளவு தான், என்றுசொல்லி வெறிக் களிப்போடு அவள்கரத்தைப் பிடித்துக் குலுக்கிவிட்டு அங்கிருந்து அகன்றான். முதலாளி முத்தண்ணா சென்றதும் தங்கம்மாள்தான் எவ்வித யோக்யதைப் பொறுப்புள்ள இடத்தில் அகப்பட்டுக் கொண்டோம் என்பதை தெளிவுறவுணரலானாள். ஆண்கள் இத்தகைய பெண் பைத்தியங்கள் என்பதை அவள் இதுவரை வுணர சந்தர்ப்பம் வாய்க்கவில்லை;

"பணத்திற்கும் காமவிளையாட்டுக்கும் எவ்வளவுதூரம் தொடர்பு இருக்கிறது? பணம்அதிகரிக்க அதிகரிக்க காமப் பித்தும் அதிகரிக்கிறது? ஏழைகள் எவ்வளவோ, ஒழுக்கத்தோடு கட்டோடு இருக்கிறார்கள். உலகத்திற்குக்கேடு விளைவிக்கும் அளவுக்கு மீறிய காம விளையாட்டுகள் ஒழியவேண்டுமானால் பணப்பெருக்கம் தடைப்படுத்தப் தடபடவேண்டும் எனக்கு ஆட்சி அதிகாரம் இருக்குமானால் முதலில் இந்த பணக்காரர்களை மட்டம் தட்டும் நடவடிக்கை அல்லவா எடுத்துக்கொள்வேன்" என்று தங்கம்மாள் மனத்தில் முதலில் எண்ணமிடலானாள். அவள் பார்வை அவள் இரவு படுத்திருந்த படுக்கையின்மீது பாய்ந்தது. அவள் உடல் ஏனோ ஏதோ அருவருப்புக் கொண்டதுபோல் சிலிர்சிலித்தது. அடுத்தபடி அவள்முகத்தில் பயங்கரகளையும் திகில் தோற்றமும் பரவின. தகாததைச் செய்துவிட்டதுபோல் அவள் உடலும் உள்ளமும் நடுங்கின. அவளையும்மீறிக் கண்ணீரும் அழுகையும் பொத்துக்கொண்டு வந்தன.

'ஐயோ! எத்தனைபேர் படுத்துருண்ட கசுமாலம்' என்று அவள்வாய் மெதுவாக உச்சரித்தது. அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை. நரம்பு வலிப்பினால் உந்தித் தள்ளப்பட்டவள் போல் நாற்காலியில் விழுந்து, அமர்ந்தாள். தன் இருகைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு, பரீட்சையில் தோல்வியுற்ற மாணவிபோல் தேம்பித்தேம்பி அழலானாள், "மிஸ் டங்கம்" என்ற குரல்கேட்டு தலைநிமிர்ந்து பார்த்தாள். தன் எதிரில் அறிமுகம் இல்லாத மூன்றும் மனுஷன் ஒருவன் முகாமங்கும் புற்றெடுத்தது போன்றமுகத்தோற்றத்துடன், அசட்டுச் சிரிப்பு சிரித்தபடி கிழட்டுக்கொக்குபோல் நிற்பதைக் கண்டாள். தங்கம்மாளின் திகில்நீங்குவதற்கு முன்னர் அந்த ஆள் என்ன ஒருமாதிரி இருக்கிறீரே; புதியஇடம் புதிய தொழில் சங்கோசமா? பயப்பட வேண்டாம். நான் இருக்கிறேன், உலகம் பிரமிக்கும்படியாக பஸ்ட் கிளாஸ் ஆங்கில்களும் குளோசப்புகளும் கொடுத்து முதல் படத்திலேயே உன்னை புகழின் உச்சிக்கு ஏற்றிவிடுகிறேன். நான்யார் தெரியுமா? சீப் காமராமென் சிங்கார். சினிமாப்படத்தின் பிரம்மா நான்தான். நான் இஷ்டப்பட்டால், ஒருபடத்தையோ நடிகையையோ ஆக்கவும் முடியும். அழிக்கவும் முடியும். என்னுடையதயவுஇல்லாவிட்டால் எப்பேர்ப்பட்ட அசகாய சூரநடிகராக இருந்தாலும் படுபாதாளத்திலே விழவேண்டியதுதான். உன்னைப்பார்க்கும்போதே நல்லவள் என்று தோன்றுகிறது. என்னுடைய தயவு உனக்கு எப்போதும் இருக்கும். இருக்கும்படி நீயும் நடந்துகொள்ளுவாய் என்று நம்புகிறேன். அப்படித்தானே என்று சொல்லி விஷப்பார்வையில்பார்த்தான் விழாக் கூட்டத்திலே விஷமக்கார வாலிபர்கள் கும்பலில் பட்டுத் தவிப்பவள் போல் தத்தளிக்கலானாள் தங்கம்மாள். ஷூட்டிங்கிற்குக் காமரா ஆங்கில் அமைக்கும்போது எவ்விதம் பார்ப்பானோ அம்மாதிரி தங்கம்மாளை பார்க்கலானான் காமாராக்கரானான சிங்கார் அந்தப்பார்வையோ தங்கம்மாளுக்கோ, பாயப்போகும் புலியின் பார்வைபோல் பயங்கரத்திகிலை யுண்டுபண்ணிற்று. குடிவெறியாலும் மோகவெறியாலும் எரியும் கொள்ளிபோல் இருந்தன அவனுடையகண்கள். அவனகையும் மெதுவாக தங்கம்மாளை நோக்கி நீண்டது. கூச்சலிட்டுப் பிறரை உதவிக்குஅழைக்கலாமா என்று முதலில் எண்ணினாள் தங்கம். ஆனால் அதுதான் மதனலோகமாயிற்றே; இந்த விளையாட்டு இங்கு அனைவருக்கும் தண்ணீர் பட்டபாடு தானே, என்ற உள்ளம் அவன் மனத்தில் பட்டது. சரி தன்சையே தனக்குதவி இந்தக் கொக்கப்பனையே முதல் பலியாக்கி இந்த சினிமாலோக வாசிகள் அனைவருக்கும் புத்திகற்பிக்க வேண்டும் என்று உறுதிகொண்டு போராட்டத்துக்குத் தயாரானாள். அதேசமயத்தில் "மிஸ் டங்கம் தயாரா" என்ற சொல்வெளியிலிருந்து கேட்டது, கதவுதட்டும் சப்தமும் தொடர்ந்தது.

அப்போதுதான் உணர்ந்தாள் தங்கம்மாள் தான் எவ்வளவு பயங்கர ஆபத்தில் சிக்கிக்கொண்டோம் என்பதை. காமராமேன் அறைக்குள் நுழைந்தபோதுமெதுவாகக்கதவை உள்தாளிட்டுவிட்டான். உஷாராக அவன் எவ்வித பலாத்காரம் செய்திருந்தாலும் யாரும் உள்ளே வந்திருக்கமுடியாது. தங்கம்மாளின் நல்ல அதிஷ்டம்தான் காமாரமனின் கட்டுதிமிறும் சமயத்தில் முதலாளி வந்து கதவுத்தட்டலானான். முதலாளியின்குரலைக் கேட்டதும் காமராமன் சினிமாப்படம் காட்டப்படுகையில் பிலிம் அறுந்துபோனால் உருவங்கள் எப்படி மறையுமோ அப்படி பின் கதவு வழியாக ஓடி மறைந்தான்.

தொடரும்.

டெலிபோன்: 86729.

நியூடன் அண்டு கம்பெனி,

80, வாலாஜா ரோடு, மௌண்ட் ரோடு,

சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும், ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

சாந்தா விவரம்

பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்.

தனிப் பிரதி	ரூ.	0—1—0
6 மாதங்களுக்கு	ரூ.	2—8—0
1 வருஷத்திற்கு	ரூ.	4—0—0

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை

விளம்பர விகிதங்களுக்கு எழுதவும்.

எல்லா ஊர்களிலும் கிடைக்கும்;

காரியாலயம்

33 திருவேங்கிட முதலித் தெரு பெரியமெட்டு. சென்னை. 3.

****

ஸ்வீடனிலிருந்து அதிக இறக்குமதிக்கு அனுமதி

இறக்குமதிக்காக ஸ்விடன் நாணயத்தை இலகு நாணயம் என இந்திய சர்க்கார் அறிவித்துள்ளனர். இத்தகைய நாடுகளிலிருந்து இதுவரை லைசன்ஸ் இன்றியே இறக்குமதி அனுமதிக்கப்பட்டு வந்தது அந்த உத்திரவு இன்றுடன் காலாவதியாவதால் இனி இறக்குமதி லைசன்ஸ் வாங்க வேண்டும்.

Edited and Published by B. Ranganadha Naidu, 33, Thiruvengada Mudali Street, Periamet, Madras 3. Printed by J. A. SILVA, at the "LIBERATOR" Press, 2-11, Mount Road, Madras 2. Jt. Editor PIVIAR. Mg. Editor R. Rajagopal.